யோனா - முன்னுரை

காலமும் இடமும்

யோனாவின் புஸ்தகம் கி.மு. 853 - 824 ஆம் வருஷங்களில் பாலஸ்தீன தேசத்தில் எழுதப்பட்டது.

ஆசிரியர்

யோனா தீர்க்கதரிசி. (யோனா 1:1; யோனா 2:1; யோனா 4:1; 2 இராஜா 14:23-27; மத் 12:39-41; மத் 16:4; லூக்கா 11:29-30).

மையக்கருத்து

யோனாவின் வாழ்க்கை வரலாறை இந்தப் புஸ்தகம் விவரிக்கிறது. இவன் பிடிவாதக் குணமுடைய யூதன். இவனுடைய கீழ்ப்படியாமையின் நிமித்தம் கர்த்தர் இவனைத் தண்டித்தார். அதன் பின்பு, யோனா நினிவே பட்டணத்தாருக்குப் பிரசங்கம் பண்ணினான். அந்தப் பட்டணத்தார் முழுவதும் மனந்திருந்தினார்கள்.

யோனாவின் புஸ்தகம் எழுதப் பட்டதற்கான நோக்கம்:

1. நினிவேயின் அழிவையும், அசீரியப் பேரரசின் அழிவையும் கர்த்தர் சுமார் நூறு வருஷக்காலமாகத் தாமதம் பண்ணியதற்குக் காரணத்தை வெளிப்படுத்துவது.

2. மனந்திருந்தி தம்மிடத்தில் வரும் யூதரையும், புறஜாதியாரையும் கர்த்தர் இரட்சிப்பார், அவர்கள்மீது கிருபையாய் இருப்பார் என்பதை அறிவிப்பது.

3. இயேசு கிறிஸ்துவின் மரணம், அடக்கம் பண்ணப்படுதல், உயிர்த்தெழுதல் ஆகியவற்றிற்கு முன்னடையாளமாக யோனாவின் வரலாற்றை விளக்கிக் கூறுவது. (மத் 12:40)

புள்ளிவிவரங்கள்

அதிகாரங்கள் - 4

வசனங்கள் - 48

கேள்விகள் - 12

புதிய தீர்க்கதரிசனம் - 1

கட்டளைகள் - 8

யோனா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில் தேவனிடத்திலிருந்து வந்திருக்கும் விசேஷித்த செய்திகள். (யோனா 1:2; யோனா 2:10; யோனா 3:2; யோனா 4:4,9,10).

பொருளடக்கம்

I. யோனாவின் முதலாவது ஊழியம் (1:1-2)

II. யோனாவின் கீழ்ப்படியாமையும் நியாயத்தீர்ப்பும்

1. கீழ்ப்படியாமை - தேவனிடத்திலிருந்து விலகிப்போவதன் இரண்டு அம்சங்கள் (1:3)

2. கர்த்தருடைய பெருங்காற்று (1:4)

3. கப்பற்காரரின் ஜெபங்கள் (1:5)

4. ஜெபிக்குமாறு யோனாவிற்கு அழைப்பு (1:6)

5. சீட்டுப்போட்டார்கள் - சீட்டு யோனா பெயரில் விழுந்தது (1:7)

யோனா - முன்னுரை

6. யோனாவின் பாவ அறிக்கை (1:8-9)

7. பெருங்காற்றிற்கு தீர்வு (1:10-12)

8. யோனாவைக் காப்பாற்றுவதற்கு முயற்சிகள் - தோல்வி (1:13-14)

9. யோனாவை சமுத்திரத்தில் தூக்கிப் போட்டார்கள் - விளைவு (1:15)

10. யோனாவின் பாவத்திலிருந்து ஆசீர்வாதம் (1:16)

11. தேவன் பெரிய மீனை ஆயத்தம் பண்ணினார் (1:17)

III. யோனாவின் மறுபொருத்தனை

1. யோனாவின் ஜெபம் (2:1-7)

2. பலியும் பொருத்தனைகளும் (2:8-9)

3. யோனாவின் வெளியேற்றம் (2:10)

IV. யோனாவின் இரண்டாம் ஊழியம்

1. யோனாவின் கீழ்ப்படிதல் (3:1-4)

2. நினிவேயின் மனந்திரும்புதல் - இரக்கம் (3:5-10)

V. யோனாவின் திருத்தம்

1. யோனாவின் கோபம் (4:1)

2. யோனாவின் முறையீடு - பதில் (4:2-4)

3. யோனாவின் குடிசை (4:5)

4. தேவனுடைய ஆமணக்குச் செடி - யோனாவின் மகிழ்ச்சி (4:6)

5. தேவனுடைய பூச்சி - யோனாவின் வருத்தம் (4:7-8)

6. யோனா கற்றுக்கொண்ட பாடம் (4:9-11)

யோனா - தொகுப்புரை

1 அதிகாரம்

I. யோனாவின் முதலாவது ஊழியம் - (1:1-2)

யோனா1:1 அமித்தாயின் குமாரனாகிய யோனாவுக்குக் கர்த்தருடைய வார்த்தை உண்டாகி, அவர்:

யோனா 1:2 நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போய், அதற்கு விரோதமாகப் பிரசங்கி; அவர்களுடைய அக்கிரமம் என் சமுகத்தில் வந்து எட்டினது என்றார்.

"யோனா" **(Jonah)** - யோனா ஒரு வரலாற்று நபர். (யோனா 1:1; 2இராஜா 14:25) பழைய ஏற்பாட்டில் இந்த நபருக்கு மட்டுமே யோனா என்னும் பெயர் கொடுக்கப் பட்டிருக்கிறது. புதிய ஏற்பாட்டில் யோனாவின் பெயர் **"Jonas"** என்பதாகும். (மத் 12:39-41; மத் 16:4; லூக்கா 11:29-32). பேதுருவின் தகப்பனுடைய பெயர் யோனா **"Jona"** அல்லது **"Jonas"** (யோவான் 1:42; யோவான் 21:15-17) என்பதாகும். பேதுருவும், யோனாவும் கலிலேயாவிலிருந்து வந்தவர்கள். (2இராஜா14:25)ஆகையினால் யோவான்7:52 ஆவது வசனத்தில் "கலிலேயாவிலிருந்து ஒரு தீர்க்கதரிசியும் எழும்புகிறதில்லை" என்று பரிசேயர் கூறியிருப்பது தவறான வாக்கியமாகும்.

"கர்த்தருடைய வார்த்தை" - கர்த்தர் யோனாவிடத்தில் வந்து தம்முடைய வார்த்தையைக் கூறினார். (யோனா 1:2). யோனா தீர்க்கதரிசி கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிய ஆயத்தமாக இருந்தபோது இந்த வாக்கியம் மறுபடியும் கூறப்பட்டிருக்கிறது. (யோனா 2:2). இந்த வாக்கியம் அல்லது இதே பொருளுடைய வாக்கியம் யோனாவின் புஸ்தகத்தில் 7 தடவைகள் கூறப்பட்டிருக்கிறது. (யோனா 1:1; யோனா 2:10; யோனா 3:1,3; யோனா 4:4,9,10).

யோனாவில் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப்போ. (யோனா 1:2).
2. அதற்கு விரோதமாகப் பிரசங்கி.
3. எழுந்திருந்து உன் தேவனை நோக்கி வேண்டிக்கொள் (யோனா 1:6).
4. நீங்கள் என்னை எடுத்துச் சமுத்திரத்திலே போட்டுவிடுங்கள் (யோனா 1:12).
5. நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போ (யோனா 3:2).
6. நான் உனக்குக் கற்பிக்கும் வார்த்தையை அதற்கு விரோதமாய்ப் பிரசங்கி.
7. மனுஷரும் மிருகங்களும் இரட்டினால் மூடிக்கொண்டு, தேவனை நோக்கி உரத்த சத்தமாய்க் கூப்பிடக்கடவர்கள். (யோனா 3:8).
8. அவரவர் தம்தம் பொல்லாத வழியையும் தம்தம் கைகளிலுள்ள கொடுமை யையும் விட்டுத் திரும்பக்கடவர்கள்.

"நினிவே" **(Nineveh)** - நோவாவின் காலத்தில் ஜலப்பிரளயத்திற்குப் பின்பு அசூர் **(Asshur)** நினிவேயைக் கட்டினான். (ஆதி 10:11-12). இது அசீரியரின் தலைநகரமாகும். நினிவே டைகிரீஸ் நதிக்கரையில் அமைந்திருக்கிறது. இதன் ஆரம்பக்காலத்துப் பெயர் நினா **(Nina)** என்பதாகும். யோனாவின் புஸ்தகத்திலும், நாகூமின் புஸ்தகத்திலும் நினிவே பட்டணம் முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கிறது. (யோனா 1:2; யோனா 3:2-7; யோனா 4:11; நாகூம் 1:1; நாகூம் 2:8; நாகூம் 3:7). செப்பனியாவும், நினிவேயைக் குறித்து முன்னறிவித்திருக்கிறார். (செப் 2:13, 2இராஜா 19:36; ஏசா 37:37; மத் 12:41; லூக்கா 11:30-32)

யோனா - தொகுப்புரை

1 அதிகாரம்

"அதற்கு விரோதமாகப் பிரசங்கி" - இந்த வாக்கியம் தேவனுடைய இரக்கத்தை வெளிப்படுத்துகிறது. எல்லா மனுஷரும் அவர்களுடைய பாவமான வழிகளிலிருந்து திரும்ப வேண்டுமென்று இஸ்ரவேலின் தேவன் விரும்புகிறார். அவர்கள் அழிவிலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார். கர்த்தர் இரக்கமுள்ளவர் என்பது யோனாவிற்குத் தெரியும். ஆகையினால் நினிவேக்கு விரோதமாக யோனா பிரசங்கியாமல் ஓடிப்போகிறான். தன்னுடைய ஜனத்தாருக்கு விரோதிகளாக இருக்கும் நினிவே பட்டணத்தார்மீது கர்த்தர் இரக்கம் காண்பிக்கக்கூடாது என்று யோனா விரும்புகிறான். கர்த்தர் நினிவேயை அழிக்க வேண்டுமென்பது யோனாவின் விருப்பம். (யோனா 4:2) ஆனால் கர்த்தரோ பாவம் செய்யும் ஜனங்களை எச்சரிக்கிறார். பாவத்திலிருந்து திரும்புவதற்கு அவர்களுக்கு ஒரு வாய்ப்பைக் கொடுக்கிறார். தம்முடைய எச்சரிப்பின் சத்தத்தைக் கேட்காமல் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம் பண்ணும் ஜனங்களை அழித்துப் போடுகிறார். (ஆதி 19:20-22).

II. யோனாவின் கீழ்ப்படியாமையும் நியாயத்தீர்ப்பும் - (1:3-17; மத் 12:38-42)

1. கீழ்ப்படியாமை - தேவனிடத்திலிருந்து விலகிப்போவதன் இரண்டு அம்சங்கள்

யோனா 1:3 அப்பொழுது யோனா கர்த்தருடைய சமுகத்தினின்று விலகி, தர்ஷீசுக்கு ஓடிப்போகும்படி எழுந்து, யோப்பாவுக்குப்போய், தர்ஷீசுக்குப்போகிற ஒரு கப்பலைக்கண்டு, கூலி கொடுத்து, தான் கர்த்தருடைய சமுகத்தினின்று விலகும்படி, அவர்களோடே தர்ஷீசுக்குப் போகக் கப்பல் ஏறினான்.

"கர்த்தருடைய சமுகத்தினின்று விலகி" - யோனா கர்த்தருடைய சமுகத்தினின்று விலகி ஓடுகிறான். நினிவே பட்டணத்தாருக்குக் கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தையைக் கூறவில்லையென்றால் அவர்கள் மனந்திரும்ப மாட்டார்கள் என்றும், தன்னுடைய ஜனத்தாருக்கு விரோதமாக இருக்கும் அவர்களைக் கர்த்தர் அழித்துப்போடுவார் என்றும் யோனா நினைக்கிறான். (யோனா 4:2).

கர்த்தரை நேசிக்கிறவர்களுக்கு அவருடைய சமுகத்திலிருப்பது மிகவும் ஆனந்தமான அனுபவமாக இருக்கும். ஆனால் கர்த்தரின் சத்துருக்களுக்கோ அவருடைய சமுகம் பயங்கரமானதாக இருக்கும். ஏராளமான ஜனங்கள் கர்த்தருடைய சமுகத்தை விரும்புகிறார்கள். தங்கள் வாழ்நாள் எல்லாம் கர்த்தருடைய சமுகத்தில் ஜீவிக்க வேண்டுமென்று ஆர்வமாக இருக்கிறார்கள். ஆனால் யோனாவோ கர்த்தருடைய சமுகத்திலிருந்து விலகிப்போகிறான். நினிவே நகரத்தாரிடமிருந்தும், அசீரியரிடமிருந்தும் தன்னுடைய ஜனங்களைக் காப்பதற்காக யோனா தன் ஜீவனையே கொடுப்பதற்கு ஆயத்தமாக இருக்கிறான். (யோனா 1:12-15) இவன் கிறிஸ்துவிற்கு ஒரு முன்மாதிரியாக இருந்தவன். யோனாவின் புஸ்தகத்தில் "கர்த்தருடைய சமுகத்தினின்று" என்னும் வாக்கியம் மூன்று முறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (யோனா 1:3,10).

"தர்ஷீஸ்" (Tarshish) - (1இராஜா 10:22)

"யோப்பா" (Joppa) - மத்திய தரைக் கடலில் வடக்கு பெலிஸ்தியாவிலுள்ள பகுதி. (யோசு 19:46; 2நாளா 2:16; எஸ்றா 3:7; அப் 9:36-42; அப் 10:5-8,23,32; அப் 11:5,13).

"கூலி கொடுத்து" - கர்த்தருடைய பிரசன்னத்திலிருந்து விலகிப்போவதற்கு யோனா கூலிகொடுக்கிறான். இவன் கொடுத்த கூலியை விட இவன் தன் ஜீவனையே கொடுக்க வேண்டியதாயிற்று. இவனோடு சேர்ந்து கப்பலிலுலுள்ள பொருட்களும் சேதமாயிற்று. (யோனா 1:5).

யோனாவின் செயல்கள்

1. யோனா தன் பிரயாணத்திற்குக் கூலி கொடுத்தான். (யோனா 1:3).

2. தான் கர்த்தருடைய சமுகத்தினின்று விலகும்படி, அவர்களோடே தர்ஷீசுக்குப் போகக் கப்பல் ஏறினான்.

யோனா - தொகுப்புரை

1 அதிகாரம்

3. யோனா கப்பலின் கீழ்த்தட்டில் இறங்கிப்போய்ப் படுத்துக்கொண்டான். (யோனா 1:5).

4. அயர்ந்த நித்திரைபண்ணினான்.

5. யோனா தன்னைப் பற்றி அறிக்கையிடுகிறான். (யோனா 1:8-9).

6. கர்த்தருக்குக் கீழ்ப்படிவதைப் பார்க்கிலும் மரித்துப்போவதை யோனா தெரிந்தெடுக்கிறான். (யோனா 1:12).

7. மீனின் வயிற்றிலிருந்து, யோனா தன் தேவனாகிய கர்த்தரைநோக்கி விண்ணப்பம் பண்ணினான். (யோனா 2:1-9)

8. யோனாவின் ஆத்துமா அவனில் தொய்ந்தது. (யோனா 2:7; மத் 12:40)

9. யோனா கர்த்தரை நினைத்தான். (யோனா 2:7).

10. யோனா தன் பொருத்தனையைப் புதுப்பித்தான். (யோனா 2:7-9; மத் 12:40)

11. யோனா எழுந்து, கர்த்தருடைய வார்த்தையின் படியே நினிவேக்குப் போனான்; (யோனா 3:3).

12. யோனா நினிவே நகரத்தில் பிரவேசித்தான். (யோனா 3:4).

13. இன்னும் நாற்பதுநாள் உண்டு, அப்பொழுது நினிவே கவிழ்க்கப்பட்டுப் போம் என்று கூறினான்.

14. தேவனுடைய இரக்கம் யோனாவுக்கு மிகவும் விசனமாயிருந்தது; அவன் கடுங்கோபங்கொண்டான். (யோனா 4:1).

15. யோனா கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணி தான் சாகிறது நலமாயிருக்கும் என்று கூறினான். (யோனா 4:2).

16. யோனாநகரத்திலிருந்து புறப்பட்டான். (யோனா 4:5).

17. நகரத்துக்குக் கிழக்கேபோய் உட்கார்ந்தான்.

18. தனக்கு ஒரு குடிசையைப் போட்டான்.

19. அதின் கீழ் நிழலில் உட்கார்ந்திருந்தான்.

20. ஆமணக்கின்மேல் யோனா மிகவும் சந்தோஷப்பட்டான். (யோனா 4:6).

21. யோனா சோர்ந்துபோனான். (யோனா 4:8).

22. தனக்குள்ளே சாவைவிரும்பினான்.

23. நான் மரணபரியந்தமும் எரிச்சலாயிருக்கிறது நல்லதுதான் என்று யோனா கூறினான். (யோனா 4:9).

2. கர்த்தருடைய பெருங்காற்று

யோனா 1:4 கர்த்தர் சமுத்திரத்தின் மேல் பெருங்காற்றை வரவிட்டார்; அதினால் கடலிலே கப்பல் உடையுமென்று நினைக்கத்தக்க பெரிய கொந்தளிப்பு உண்டாயிற்று.

தேவனுடைய கிரியைகள்

1. நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போய், அதற்கு விரோதமாகப் பிரசங்கி என்று கூறினார். (யோனா 1:2).

2. கர்த்தர் சமுத்திரத்தின்மேல் பெருங்காற்றை வரவிட்டார் (யோனா 1:4).

3. யோனாவை விழுங்கும்படி ஒரு பெரிய மீனைக் கர்த்தர் ஆயத்தப் படுத்தியிருந்தார்; (யோனா 1:16).

4. கர்த்தர் மீனுக்குக் கட்டளையிட்டார் (யோனா 2:10)

5. கர்த்தர் யோனாவிற்கு இரண்டாந்தரம் கட்டளையிட்டார். (யோனா 3:2).

6. தேவன் அவர்களுடைய கிரியைகளைப் பார்த்தார். (யோனா 3:10).

7. தாம் அவர்களுக்குச் செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக்குறித்து மனஸ்தாபப்பட்டார்.

யோனா - தொகுப்புரை

1 அதிகாரம்

8. நினிவேயை அழிக்காதிருந்தார்.

9. கர்த்தர் யோனாவிடம் கேள்வி கேட்டார். (யோனா 4:4).

10. தேவனாகிய கர்த்தர் ஒரு ஆமணக்குச் செடியை முளைக்கக் கட்டளையிட்டார். (யோனா 4:6).

11. அதை அவன்மேல் ஓங்கி வளரப் பண்ணினார். (யோனா 4:6,10).

12. தேவன் ஒரு பூச்சியைக் கட்டளையிட்டார்; அது ஆமணக்குச் செடியை அரித்துப்போட்டது (யோனா 4:7).

13. தேவன் உஷ்ணமான கீழ்க்காற்றைக் கட்டளையிட்டார் (யோனா 4:8).

14. தேவன் யோனாவிடம் கேள்வி கேட்டார். (யோனா 4:9).

15. தேவன் யோனாவிற்குப் பாடம் கற்பித்தார். (யோனா 4:10-11).

3. கப்பற்காரரின் ஜெபங்கள் - (சங் 107)

யோனா 1:5 அப்பொழுது கப்பற்காரர் பயந்து, அவனவன் தன்தன் தேவனை நோக்கி வேண்டுதல்செய்து, பாரத்தை லேசாக்கும் படிக் கப்பலில் இருந்த சரக்குகளைச் சமுத்திரத்தில் எறிந்து விட்டார்கள்; யோனாவோவென்றால் கப்பலின் கீழ்த்தட்டில் இறங்கிப்போய்ப் படுத்துக்கொண்டு, அயர்ந்த நித்திரை பண்ணினான்.

கப்பற்காரரின் செயல்கள்

1. கப்பற்காரர் பயந்து, அவனவன் தன்தன் தேவனை நோக்கி வேண்டுதல் செய்தார்கள். (யோனா 1:5).

2. பாரத்தை லேசாக்கும்படிக் கப்பலில் இருந்த சரக்குகளைச் சமுத்திரத்தில் எறிந்து விட்டார்கள்.

3. அவர்கள் யோனாவைக் கேள்வி கேட்டார்கள். (யோனா 1:6).

4. சீட்டுப்போட்டார்கள். (யோனா 1:7).

5. அவர்கள் யோனாவிடம் மறுபடியும் கேள்வி கேட்டார்கள். (யோனா 1:8).

6. அவர்கள் மிகவும் பயந்து யோனாவிடம் மறுபடியும் கேள்விகேட்டார்கள். (யோனா 1:10-11).

7. அந்த மனுஷர் கரைசேரும்படி வேகமாய் தண்டுவலித்தார்கள் (யோனா 1:13).

8. அவர்கள் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள். (யோனா 1:14).

9. யோனாவை எடுத்துச் சமுத்திரத்திலே போட்டுவிட்டார்கள் (யோனா 1:15).

10. கர்த்தருக்குப் பலியிட்டுப் பொருத்தனைகளைப் பண்ணினார்கள். (யோனா 1:16).

4. ஜெபிக்குமாறு யோனாவிற்கு அழைப்பு

யோனா 1:6 அப்பொழுது மாலுமி அவனிடத்தில் வந்து: நீ நித்திரை பண்ணுகிறது என்ன? எழுந்திருந்து உன் தேவனை நோக்கிவேண்டிக் கொள்; நாம் அழிந்துபோகாதபடிக்குச் சுவாமி ஒருவேளை நம்மை நினைத் தருளுவார் என்றான்.

5. சீட்டுப்போட்டார்கள் - சீட்டு யோனா பெயரில் விழுந்தது

யோனா 1:7 அவர்கள் யார்நிமித்தம் இந்த ஆபத்து நமக்கு நேரிட்டதென்று நாம் அறியும்படிக்குச் சீட்டுப் போடுவோம் வாருங்கள் என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டு சீட்டுப்போட்டார்கள்; யோனாவின் பேருக்குச் சீட்டு விழுந்தது.

"யோனாவின் பேருக்குச் சீட்டு விழுந்தது" - அவர்கள் யார்நிமித்தம் இந்த ஆபத்து நமக்கு நேரிட்டதென்பதைச் சீட்டுப்போட்டு அறிந்து கொண்டார்கள். ஆனால் அந்த ஆபத்துக்கான காரணத்தை அவர்களால் அறிந்துகொள்ளமுடியவில்லை. ஆகையினால் அவர்கள் யோனாவிடம் மறுபடியும் கேள்வி கேட்கிறார்கள். (யோனா 1:7-8).

யோனா - தொகுப்புரை

1 அதிகாரம்

6. யோனாவின் பாவ அறிக்கை

யோனா 1:8 அப்பொழுது அவர்கள் அவனைநோக்கி: யார்நிமித்தம் இந்த ஆபத்து நமக்கு நேரிட்டதென்று நீ எங்களுக்குச் சொல்லவேண்டும்; உன் தொழிலென்ன? நீ எங்கேயிருந்து வருகிறாய்? உன் தேசம் எது? நீ என்ன ஜாதியான் என்று கேட்டார்கள்.

யோனா 1:9 அதற்கு அவன்: நான் எபிரெயன்; சமுத்திரத்தையும் பூமியையும் உண்டாக்கின பரலோகத்தின் தேவனாகிய கர்த்தர் இடத்தில் பயபக்தியுள்ளவன் என்றான்.

"அதற்கு அவன்" - யோனா அவர்களிடம் தன் வரலாறு முழுவதையும் கூறுகிறான். (யோனா 1:9=யோனா 4:1-3).

"கர்த்தர் இடத்தில் பயபக்தியுள்ளவன்" - யோனா கர்த்தருக்குப் பயந்திருந்தால் அவருக்குக் கீழ்ப்படிந்து அவர் சொன்ன பிரகாரம் நினிவேக்குப் போயிருந்திருப்பான்.

7. பெருங்காற்றிற்கு தீர்வு

யோனா 1:10 அவன் கர்த்தருடைய சமுகத்தினின்று விலகிஓடிப்போகிறவன் என்று தங்களுக்கு அறிவித்ததினால், அந்த மனுஷர் மிகவும் பயந்து, அவனைநோக்கி: நீ ஏன் இதைச் செய்தாய் என்றார்கள்.

யோனா 1:11 பின்னும் சமுத்திரம் அதிகமாய்க் கொந்தளித்துக் கொண்டிருந்தபடியால், அவர்கள் அவனை நோக்கி: சமுத்திரம் நமக்கு அமரும்படி நாங்கள் உனக்கு என்ன செய்யவேண்டும் என்று கேட்டார்கள்.

யோனா 1:12 அதற்கு அவன்: நீங்கள் என்னை எடுத்துச் சமுத்திரத்திலே போட்டுவிடுங்கள்; அப்பொழுது சமுத்திரம் உங்களுக்கு அமர்ந்திருக்கும்; என்னிமித்தம் இந்தப் பெரிய கொந்தளிப்பு உங்கள்மேல் வந்ததென்பதை நான் அறிவேன் என்றான்.

"சமுத்திரம் நமக்கு அமரும்படி நாங்கள் உனக்கு என்ன செய்யவேண்டும்" - கர்த்தருக்குக் கீழ்ப்படிவதற்குப் பதிலாக யோனா மரித்துப்போவதைத் தீர்மானம் பண்ணினான். (யோனா 1:11-12).

8. யோனாவைக் காப்பாற்றுவதற்கு முயற்சிகள் - தோல்வி

யோனா 1:13 அந்த மனுஷர் கரைசேரும்படி வேகமாய் தண்டுவலித்தார்கள்; ஆனாலும் சமுத்திரம் வெகு மும்முரமாய்க் கொந்தளித்துக் கொண்டேயிருந்தபடியால் அவர்களால் கூடாமற்போயிற்று.

யோனா 1:14 அப்பொழுது அவர்கள் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு: ஆ கர்த்தாவே, இந்த மனுஷனுடைய ஜீவனிமித்தம் எங்களை அழித்துப் போடாதேயும்; குற்றமில்லாத இரத்தப் பழியை எங்கள்மேல் சுமத்தாதேயும்; தேவரீர் கர்த்தர்; உமக்குச் சித்தமாயிருக்கிறபடி செய்கிறீர் என்று சொல்லி,

"அவர்களால் கூடாமற்போயிற்று" - கப்பற்காரர்கள் கர்த்தரிடத்தில் ஜெபம் பண்ணினார்கள். கரைசேரும்படி வேகமாய் தண்டுவலித்தார்கள். எப்படியாவது யோனாவைக் காப்பாற்ற வேண்டுமென்று முயற்சி பண்ணினார்கள். (யோனா 1:13-14). ஆனால் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. தம்மை விட்டுப் பின்வாங்கிப் போன யோனாவிடம் கர்த்தர் கிரியை நடப்பித்துக் கொண்டிருக்கிறார். (யோனா 1:4,14-17)

9. யோனாவை சமுத்திரத்தில் தூக்கிப்போட்டார்கள் - விளைவு

யோனா 1:15 யோனாவை எடுத்துச் சமுத்திரத்திலே போட்டுவிட்டார்கள்; சமுத்திரம் தன் மும்முரத்தைவிட்டு அமர்ந்தது.

"யோனாவை எடுத்து" - மிகவும் பயத்துடனும், பக்தியுடனும், கவனமாகவும், அவர்கள் யோனாவை எடுத்துச் சமுத்திரத்திலே போட்டுவிட்டார்கள் (ஆதி 47:30; யாத் 28:12,29)

யோனா - தொகுப்புரை

1 அதிகாரம்

யோனா புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கும் அற்புதங்கள்

1. பெருங்காற்று (யோனா 1:4)
2. சீட்டு யோனாவின் பேரில் விழுந்தது. (யோனா 1:7)
3. சமுத்திரம் தன் மும்முரத்தைவிட்டு அமர்ந்தது. (யோனா 1:15)
4. மீன் வயிற்றிலே யோனா இராப்பகல் மூன்று நாள் இருந்தது. (யோனா 1:17)
5. மீன் யோனாவைக் கரையிலே கக்கி விட்டது.
6. மீனின் வயிற்றிலிருந்து யோனா உயிரோடு வந்தது. (யோனா 2:10; மத் 12:40)
7. கிருபையின் அற்புதம் (யோனா 3:5-10; யோனா 4:11)
8. ஒரு நாள் இரவில் ஆமணக்குச் செடி முளைத்தது. (யோனா 4:6,10)
9. ஆமணக்குச் செடியை அரித்துப் போட்ட பூச்சி உண்டானது. (யோனா 4:7)
10. உஷ்ணமான கீழ்க்காற்று. (யோனா 4:8)

10. யோனாவின் பாவத்திலிருந்து ஆசீர்வாதம்

யோனா 1:16 அப்பொழுது அந்த மனுஷர் கர்த்தருக்கு மிகவும் பயந்து, கர்த்தருக்குப் பலியிட்டுப் பொருத்தனைகளைப் பண்ணினார்கள்.

11. தேவன் பெரிய மீனை ஆயத்தம் பண்ணினார்

> யோனா 1:17 யோனாவை விழுங்கும்படி ஒரு பெரிய மீனைக் கர்த்தர் ஆயத்தப்படுத்தியிருந்தார்; அந்த மீன் வயிற்றிலே யோனா இராப்பகல் மூன்றுநாள் இருந்தான்.

"யோனாவை விழுங்கும்படி" - மீனின் வயிற்றில் மூன்று நாள் இரவும் பகலும் யோனா உயிரோடு இருந்தான் என்று ஒருசிலரும், மீனின் வயிற்றில் யோனா மரித்துப்போனான், பின்பு மூன்றாம் நாளில் அவன் உயிர்த்தெழுந்தான் என்று வேறுசிலரும் இந்த வாக்கியத்திற்கு வியாக்கியானம் கூறுகிறார்கள். மத் 12:40 ஆவது வசனத்தில் யோனா இயேசு கிறிஸ்துவிற்கு முன்னடையாளமாகக் கூறப்பட்டிருக்கிறான். இயேசு கிறிஸ்துவைப் போல யோனாவும் மூன்றுநாள் பூமியின் அடியில் மரித்தவனாக இருந்திருப்பான் என்பது இவர்களுடைய வியாக்கியானம்.

2 அதிகாரம்

III. யோனாவின் மனுபொருத்தனை

1. யோனாவின் ஜெபம்

யோனா 2:1 அந்த மீனின் வயிற்றிலிருந்து, யோனா தன் தேவனாகிய கர்த்தரைநோக்கி விண்ணப்பம்பண்ணி:

யோனா 2:2 என் நெருக்கத்தில் நான் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன்; அவர் எனக்கு உத்தரவு அருளினார்; நான் பாதாளத்தின் வயிற்றிலிருந்து கூக்குரலிட்டேன், நீர் என் சத்தத்தைக் கேட்டீர்.

யோனா 2:3 சமுத்திரத்தின் நடுமையமாகிய ஆழத்திலே நீர் என்னைத் தள்ளிவிட்டீர்; நீரோட்டம் என்னைச் சூழ்ந்துகொண்டது; உம்முடைய வெள்ளங்களும் அலைகளும் எல்லாம் என்மேல் புரண்டது.

யோனா 2:4 நான் உமது கண்களுக்கு எதிரே இராதபடிக்குத் தள்ளப்பட்டேன்; ஆகிலும் இன்னமும் உம்முடைய பரிசுத்த ஆலயத்தை நோக்குவேன் என்றேன்.

யோனா 2:5 தண்ணீர்கள் பிராண பரியந்தம் என்னை நெருக்கினது; ஆழி என்னைச் சூழ்ந்தது; கடற்பாசி என தலையைச் சுற்றிக்கொண்டது.

யோனா 2:6 பர்வதங்களின் அடிவாரங்கள் பரியந்தமும் இறங்கினேன்; பூமியின் தாழ்ப்பாள்கள் என்றென்றைக்கும் என்னை அடைக்கிறதாயிருந்தது; ஆனாலும் என் தேவனாகிய கர்த்தாவே, நீர் என் பிராணனை அழிவுக்குத் தப்புவித்தீர்.

யோனா 2:7 என் ஆத்துமா என்னில் தொய்ந்துபோகையில் கர்த்தரை நினைத்தேன்; அப்பொழுது என் விண்ணப்பம் உமது பரிசுத்த ஆலயத்திலே உம்மிடத்தில் வந்து சேர்ந்தது.

"யோனா தன் தேவனாகிய கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணி:" - யோனா மீனின் வயிற்றில் இருக்கிறான். அவன் ஜெபம் பண்ணிய விதத்தைக் குறித்து இரண்டுவிதமாக வியாக்கியானம் கூறுகிறார்கள். அவன் மீனின் வயிற்றில் உயிரோடு இருந்து கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினான் என்பது ஒரு வியாக்கியானம். அவன் மீனின் வயிற்றில் மரித்துப்போனான் என்றும், அவனுடைய ஆத்துமா பாதாளத்திற்குப் போயிற்று என்றும், பாதாளத்திலிருந்து அவன் தன் ஆத்துமாவில் தேவனாகிய கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினான் என்பது மற்றொரு வியாக்கியானம்.

கர்த்தரிடத்தில் ஜெபம் ஏறெடுக்கப்பட்ட ஸ்தலங்கள்

1. மிருகங்கள் பலிசெலுத்தப்படும் பலிபீடங்கள். (ஆதி 12:7-8; ஆதி 13:4)
2. திறந்த வெளியில் நடக்கும்போது. (ஆதி 18:23-33)
3. தூரவில் (ஆதி 24:12-14)
4. யுத்தம் பண்ணும்போது (ஆதி 32:24-29)
5. கழுதை பேசிய இடத்தில் (எண் 22:34)
6. இயந்திரத்தில் சங்கிலிகளால் கட்டப்பட்ட நிலைமையில் (நியா 16:28-31)
7. சாம்பல் குவியலில் (யோபு 2:8,13; யோபு 3:1-26)
8. மீனின் வயிற்றில் (யோனா 2:1)
9. பாதாளத்தில் (யோனா 2:2; லூக்கா 16:19-31)
10. ஆற்றில் நின்றுகொண்டு (லூக்கா 3:21-22)
11. வனாந்தரத்தில் (லூக்கா 5:15-16)
12. கல்லறையில் (யோவான் 11:41-42)
13. சிலுவை மீது (லூக்கா 23:34-46)

யோனா - தொகுப்புரை

2 அதிகாரம்

14. சிறைச்சாலையில் (அப் 27:23-35)

15. கப்பற்சேதத்தில் (அப் 27:23-35)

16. பலிபீடத்தின்கீழ் (வெளி 6:9-11)

"நான் பாதாளத்தின் வயிற்றிலிருந்து கூக்குரலிட்டேன்" - யோனா மீனின் வயிற்றிலிருந்தும், சீயோல் எனப்படும் பாதாளத்திலிருந்தும் கூக்குரலிட்டான். யோனா மீனின் வயிற்றில் மரித்து அவன் மறுபடியும் உயிர்த்தெழுந்தான் என்று சிலர் வியாக்கியானம் கூறுகிறார்கள். இந்த மூன்றுநாட்களில் அவன் பாதாளத்தில் இருந்தான் என்பது இவர்களுடைய வியாக்கியானம். (யோனா 2:1-2). இந்த வசனத்தில் பாதாளம் என்பதற்குப் பயன்படுத்தப் பட்டிருக்கும் எபிரெய வார்த்தை "சீயோல்" She'owl என்பதாகும்.

பாதாளம் (hell) - שְׁאוֹל - sheh-ole', sheh-ole' - 7585

பொதுப்பெயர்ச்சொல் - பாதாளம், நரகம் (the unseen world, the place of departed souls; not the grave where the body goes at death)

"நீர் என் பிராணனை அழிவுக்குத் தப்புவித்தீர்" - யோனா மீனின் வயிற்றில் இருந்தபோது அவன் மரித்துப்போனான் என்று விளக்குவதற்காக சிலர் இந்த வாக்கியத்தைப் பயன்படுத்துகிறார்கள். (யோனா 2:6-7; மத் 12:40)

2. பலியும் பொருத்தனைகளும்

யோனா 2:8 பொய்யான மாயையைப் பற்றிக்கொள்ளுகிறவர்கள் தங்களுக்கு வரும் கிருபையைப் போக்கடிக்கிறார்கள்.

யோனா 2:9 நானோவெனில் துதியின் சத்தத்தோடே உமக்குப் பலியிடுவேன்; நான் பண்ணின பொருத்தனையைச் செலுத்துவேன்; இரட்சிப்பு கர்த்தருடையது என்றான்.

"தங்களுக்கு வரும் கிருபையைப் போக்கடிக்கிறார்கள்" - விக்கிரகாராதனை செய்கிறவர்கள் தங்கள் பாவங்களின் நிமித்தமாகக் கர்த்தருடைய கிருபையைப் புறக்கணிக்கிறார்கள். கர்த்தருடைய கிருபை வெளிப்படுவதற்கு முன்பாக ஜனங்கள் தங்களுடைய பாவங்களை அறிக்கை செய்து அவற்றிலிருந்து விலகி வரவேண்டும். (நீதி 28:13; 1யோவான் 1:9).

"நானோவெனில் துதியின் சத்தத்தோடே உமக்குப் பலியிடுவேன்" - யோனா தன்னுடைய பாவத்தை அறிக்கை செய்கிறான். கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறான். கர்த்தர் மீனுக்குக் கட்டளையிடுகிறார். அது யோனாவைக் கரையிலே கக்கிவிட்டது. (யோனா 2:9-10).

3. யோனாவின் வெளியேற்றம்

யோனா 2:10 கர்த்தர் மீனுக்குக் கட்டளையிட்டார், அது யோனாவைக் கரையிலே கக்கிவிட்டது.

"அது யோனாவைக் கரையிலே கக்கிவிட்டது" - யோனா பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலினால் இந்த வார்த்தைகளை எழுதியிருக்கிறான். மீனின் வயிற்றில் அவன் மரித்துப்போயிருந்தால், அவனுடைய மரண காலத்தில் நடைபெற்ற சம்பவங்களெல்லாம் இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. அவன் உயிரோடு எழும்பிய பின்பு பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலினால் இந்த வார்த்தைகளையெல்லாம் எழுதியிருக்க வேண்டுமென்பது ஒருசிலரின் வியாக்கியானமாகும். (யோனா 3:1-10).

யோனா - தொகுப்புரை

3 அதிகாரம்

IV. யோனாவின் இரண்டாம் ஊழியம்

1. யோனாவின் கீழ்ப்படிதல்

யோனா 3:1 இரண்டாந்தரம் கர்த்தருடைய வார்த்தை யோனாவுக்கு உண்டாகி, அவர்:

யோனா 3:2 நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போய், நான் உனக்குக் கற்பிக்கும் வார்த்தையை அதற்கு விரோதமாய்ப் பிரசங்கி என்றார்.

யோனா 3:3 யோனா எழுந்து, கர்த்தருடைய வார்த்தையின்படியே நினிவேக்குப்போனான்; நினிவே மூன்றுநாள் பிரயாண விஸ்தாரமான மகா பெரிய நகரமாயிருந்தது.

யோனா 3:4 யோனா நகரத்தில் பிரவேசித்து, ஒருநாள் பிரயாணம்பண்ணி: இன்னும் நாற்பதுநாள் உண்டு, அப்பொழுது நினிவே கவிழ்க்கப் பட்டுப்போம் என்று கூறினான்.

"இரண்டாந்தரம் கர்த்தருடைய வார்த்தை" - கர்த்தர் யோனாவைத் தம்முடைய ஊழியத்தைச் செய்யுமாறு இரண்டாந்தரம் அழைக்கிறார். (யோனா 3:1; யோனா 1:2).

"நினிவே மூன்றுநாள் பிரயாண விஸ்தாரமான மகா பெரிய நகரமாயிருந்தது." - இது சுமார் 64 மைல் சுற்றளவு கொண்ட பட்டணமாகும். (யோனா 3:3-4). இதன் நீளம் சுமார் 18 மைல். அகலம் சுமார் 14 மைல். பாபிலோன் நகரத்தைவிட பெரியது. இதன் மதில்சுவர்கள் 100 அடி உயரம் கொண்டவை. இந்தச் சுவர்களின்மீது மூன்று இரதங்கள் ஒரே நேரத்தில் செல்லலாம். இந்தச் சுவர்களில் 1,500 காவல் கோபுரங்கள் இருந்தன.

தீர்க்கதரிசன எண் - 1

"இன்னும் நாற்பதுநாள் உண்டு, அப்பொழுது நினிவே கவிழ்க்கப்பட்டுப்போம்" (யோனா 3:4)

இந்தத் தீர்க்கதரிசனம் நிபந்தனைக்குட்பட்டது. நினிவேயின் ஜனத்தார் மனந்திரும்பவில்லையென்றால் அந்தப் பட்டணம் கவிழ்க்கப் படும். கர்த்தர் இந்தப் பட்டணத்தாருக்கு எச்சரிப்பைக் கொடுக்கிறார். கர்த்தர் கிருபையுள்ளவர். நினிவே பட்டணத்தார் கர்த்தருடைய செய்தியைக் கேட்டு மனந்திரும்புகிறார்கள். இந்தப் பட்டணத்தைக் கர்த்தர் அழிக்கவில்லை. "விசுவாசம் கேள்வியினாலே வரும். கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்". (ரோமர் 10:17).

2. நினிவேயின் மனந்திரும்புதல் - இரக்கம்

யோனா 3:5 அப்பொழுது நினிவேயிலுள்ள ஜனங்கள் தேவனை விசுவாசித்து, உபவாசஞ்செய்யும்படிக் கூறினார்கள்; பெரியோர்முதல் சிறியோர் மட்டும் இரட்டுடுத்திக் கொண்டார்கள்.

யோனா 3:6 இந்தச் செய்தி நினிவேயின் ராஜாவுக்கு எட்டினபோது, அவன் தன் சிங்காசனத்தை விட்டு எழுந்து, தான் உடுத்தியிருந்த உடுப்பைக் கழற்றிப் போட்டு, இரட்டை உடுத்திக்கொண்டு, சாம்பலிலே உட்கார்ந்தான்.

யோனா 3:7 மேலும் ராஜா, தானும் தன் பிரதானிகளும் நிர்ணயம்பண்ணின கட்டளையாக, நினிவேயிலெங்கும் மனுஷரும் மிருகங்களும், மாடுகளும் ஆடுகளும் ஒன்றும் ருசிபாராதிருக்கவும், மேயாமலும் தண்ணீர் குடியாமலும் இருக்கவும்,

யோனா 3:8 மனுஷரும் மிருகங்களும் இரட்டினால் மூடிக்கொண்டு, தேவனை நோக்கி உரத்த சத்தமாய்க் கூப்பிடவும், அவரவர் தம்தம் பொல்லாத வழியையும் தம்தம் கைகளிலுள்ள கொடுமையையும் விட்டுத் திரும்பவுங்கடவர்கள்.

யோனா - தொகுப்புரை

3 அதிகாரம்

யோனா 3:9 யாருக்குத்தெரியும்; நாம் அழிந்து போகாதபடிக்கு ஒருவேளை தேவன் மனஸ்தாபப்பட்டு, தம்முடைய உக்கிரகோபத்தைவிட்டுத் திரும்பி னாலும் திரும்புவார் என்று கூறச் சொன்னான்.

யோனா 3:10 அவர்கள் தங்கள் பொல்லாத வழியைவிட்டுத் திரும்பி னார்களென்று தேவன் அவர்க ளுடைய கிரியைகளைப் பார்த்து, தாம் அவர்களுக்குச் செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக்குறித்து மனஸ்தாபப்பட்டு, அதைச் செய்யா திருந்தார்.

"அப்பொழுது நினிவேயிலுள்ள ஜனங்கள்" - கர்த்தர் கிருபையாக மனமிரங்கி, நினிவேயை அழிக்காமல் விட்டுவிடுவாரோ என்று யோனா பயந்தான். அவன் எதிர்பார்த்த பிரகாரமே காரியம் நடை பெறுகிறது. (யோனா 4:1-3) நினிவேயின் ஜனத்தாரைப் பற்றி இயேசு கிறிஸ்துவும் கூறியிருக்கிறார். (மத் 12:41; லூக்கா 11:30-32).

தேவனுடைய இரக்கத்தைப் பெறுவதற்கு நினிவே ஜனத்தார் செய்த காரியங்கள்

1. அவர்கள் தேவனை விசுவாசித்தார்கள்.

2. உபவாசஞ்செய்யும்படிக் கூறினார்கள்.

3. பெரியோர்முதல் சிறியோர்மட்டும் இரட்டுடுத்திக்கொண்டார்கள்.

4. நினிவேயின் ராஜா தன் சிங்கா சனத்தை விட்டு எழுந்து, தான் உடுத்தியிருந்த உடுப்பைக் கழற்றிப் போட்டு, இரட்டை உடுத்திக்கொண்டு, சாம்பலிலே உட்கார்ந்தான். (யோனா 3:6).

5. ராஜா, தானும் தன் பிரதானிகளும் நிர்ணயம் பண்ணினகட்டளையாக, நினிவேயிலெங்கும் மனுஷரும் மிருகங் களும், மாடுகளும் ஆடுகளும் ஒன்றும் ருசிபாராதிருக்கவும், மேயாமலும் தண்ணீர் குடியாமலும் இருக்கவும், மனுஷரும் மிருகங்களும் இரட்டினால் மூடிக்கொண்டு, தேவனை நோக்கி உரத்த சத்தமாய்க் கூப்பிடவும் வேண்டுமென்று ஆணை பிறப் பித்தான். (யோனா 3:7-8).

6. அவரவர் தம்தம் பொல்லாத வழியையும் தம்தம் கைகளிலுள்ள கொடுமை யையும் விட்டுத் திரும்பவுங்கடவர்கள் என்று ஆணை பிறப்பித்தான். (யோனா 3:8).

"தேவன் அவர்களுடைய கிரியைகளைப் பார்த்து" - நினிவே பட்டணத்தார் தங்கள் பொல்லாத வழிகளை விட்டு திரும்பியதைக் கர்த்தர் பார்க்கிறார். தாம் அவர்களுக்குச் செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக் குறித்து கர்த்தர் மனஸ்தாபப்படுகிறார். அந்தப் பட்டணத்தை அழிக்காமல் விட்டுவிடுகிறார். (யோனா 4:11).

யோனா - தொகுப்புரை

4 அதிகாரம்

V. யோனாவின் திருத்தம்

1. யோனாவின் கோபம்

யோனா 4:1 யோனாவுக்கு இது மிகவும் விசனமாயிருந்தது; அவன் கடுங்கோபங் கொண்டு,

"யோனாவுக்கு இது மிகவும் விசனமாயிருந்தது" - நினிவே பட்டணத்தார் மனந்திரும்பியதில் யோனாவிற்குப் பிரியமில்லை. அவர்கள் மனந்திரும்பாமல் பாவம் செய்ய வேண்டுமென்றும், கர்த்தர் அவர்களை அழிக்க வேண்டுமென்றும் யோனா எதிர்பார்த்தான். ஆனால் கர்த்தரோ நினிவே பட்டணத்திலுள்ள 1,20,000 பேரை அழிக்காமல் விட்டுவிட்டார். யோனாவின் ஊழியத்தின் மூலமாக நல்ல பலன் கிடைத்தது. 1,20,000 பேர் இரட்சிக்கப் பட்டார்கள். ஆனால் யோனா இதில் பிரியப்படவில்லை.

2. யோனாவின் முறையீடு - பதில்

யோனா 4:2 கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணி: ஆ கர்த்தாவே, நான் என் தேசத்தில் இருக்கும்போதே நான் இதைச் சொல்லவில்லையா? இதினிமித்தமே நான் முன்னமே தர்ஷீசுக்கு ஓடிப்போனேன்; நீர் இரக்கமும் மன உருக்கமும் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுள்ளவரும், தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமான தேவனென்று அறிவேன்.

யோனா 4:3 இப்போதும் கர்த்தாவே, என் பிராணனை என்னைவிட்டு எடுத்துக் கொள்ளும்; நான் உயிரோடிருக்கிறதைப் பார்க்கிலும் சாகிறது நலமாயிருக்கும் என்றான்.

யோனா 4:4 அதற்குக் கர்த்தர்: நீ எரிச்சலாயிருக்கிறது நல்லதோ என்றார்.

"கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணி" - கர்த்தருடைய கிருபையின் நிமித்தம் யோனா கோபமாக இருக்கிறான். இப்படிப்பட்ட ஜெபத்திற்குக் கர்த்தர் பதில் கொடுக்க மாட்டார். தன்னுடைய ஊழியம் வெற்றிகரமாக அமைந்த தற்காக யோனா வேதப் படுகிறான். மனுஷருடைய ஆத்துமாக் களையும், தேவனுடைய சித்தத்தையும்விட யோனாவிற்கு அவனுடைய சுய சித்தமே பெரிதாயிருக்கிறது.

"நான் என் தேசத்தில் இருக்கும் போதே" - கர்த்தர் யோனாவை நினிவேக்குப் போகுமாறு அழைத்தபோது அவன் அங்கு போகாமல் தன் தேசத்திலேயே இருந்து விடுகிறான்.

யோனா தர்ஷீசுக்கு ஓடிப்போனதற்குக் காரணம்

1. தேவன் இரக்கமுள்ளவர். (யோனா 4:2).
2. மன உருக்கமுள்ளவர்.
3. நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுள்ளவர்.
4. தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவர்

"கர்த்தாவே, என் பிராணனை என்னைவிட்டு எடுத்துக்கொள்ளும்" - 1,20,000பேர் மரணத்திலிருந்தும், அழிவிலிருந்தும் இரட்சிக்கப் பட்டிருக்கிறார்கள். கர்த்தருடைய இரக்கத்தினாலும், மனஉருக் கத்தினாலும், நீடிய சாந்தத்தினாலும், மிகுந்த கிருபையினாலும் இந்த இரட்சிப்பு நடை பெற்றிருக்கிறது. ஆனால் யோனாவோ இந்த இரட்சிப்பை விரும்பவில்லை.

3. யோனாவின் குடிசை

யோனா 4:5 பின்பு யோனா நகரத்திலிருந்து புறப்பட்டு, நகரத்துக்குக் கிழக்கேபோய், அங்கே தனக்கு ஒரு குடிசையைப் போட்டு, நகரத்துக்குச் சம்பவிக்கப்போகிறதைத் தான் பார்க்குமட்டும் அதின் கீழ் நிழலில் உட்கார்ந்திருந்தான்.

4 அதிகாரம்

"நகரத்துக்குச் சம்பவிக்கப்போகிறதைத் தான் பார்க்குமட்டும்" - கர்த்தர் எப்படியாவது நினிவே பட்டணத்தை அழிப்பார். அதிலுள்ள 1,20,000 மரித்துப்போவார்கள் என்று யோனா இன்னும் நம்பிக் கொண்டிருக்கிறான். கர்த்தர் தன்னுடைய விருப்பத்தை நிறைவேற்றுவார் என்றும், அதைத் தான் பார்க்க வேண்டுமென்றும் யோனா விரும்புகிறான். அவனுடைய கோபம் இன்னும் குறையவில்லை. (யோனா 4:6-11).

யோனாவுடைய தலையின்மேல் நிழலுண்டாயிருக்கவும், அவனை அவனுடைய மனமடிவுக்கு நீங்கலாக்கவும் தேவனாகிய கர்த்தர் ஒரு ஆமணக்குச் செடியை முளைக்கக் கட்டளையிட்டார். அதை அவன்மேல் ஓங்கி வளரப் பண்ணினார்; அந்த ஆமணக்கின்மேல் யோனா மிகவும் சந்தோஷப்பட்டான். (யோனா 4:6). யோனாவிற்கு இந்தச் சந்தோஷம் மட்டுமே இருந்தது. ஜனங்கள் இரட்சிக்கப்பட்டதற்காக அவனிடத்தில் எந்தச் சந்தோஷமும் இல்லை.

தேவன் ஒரு பூச்சியைக் கட்டளையிட்டார்; அது ஆமணக்குச்செடியை அரித்துப்போட்டது; அதினால் அது காய்ந்து போயிற்று. (யோனா 4:7). அதன் பின்பு, தேவன் உஷ்ணமான கீழ்க்காற்றைக் கட்டளையிட்டார்; அப்பொழுது வெயில் யோனாவின் தலையில் பட்டது. யோனா சோர்ந்துபோனான். மறுபடியும் தான் உயிரோடிக்கிறதைப் பார்க்கிலும் சாகிறது நலமாயிருக்கும் என்று கூறினான். (யோனா 4:8) யோனா சோர்ந்து போயிருந்த நிலைமையில் கர்த்தர் அவனைச் சந்திக்கிறார். ஆனால் யோனாவோ கர்த்தரிடத்தில் தான் எரிச்சலாயிருக்கிறது நல்லது என்று தன்னுடைய கோபத்தில் மறுமொழி கூறுகிறான். (யோனா 4:9). கர்த்தர் யோனாவிற்குத் தம்முடைய நீதியையும், கிருபையையும், மன உருக்கத்தையும் வெளிப்படுத்துகிறார். (யோனா 4:10-11).

4. தேவனுடைய ஆமணக்குச் செடி - யோனாவின் மகிழ்ச்சி

யோனா 4:6 யோனாவுடைய தலையின்மேல் நிழலுண்டாயிருக்கவும், அவனை அவனுடைய மனமடிவுக்கு நீங்கலாக்கவும் தேவனாகிய கர்த்தர் ஒரு ஆமணக்குச் செடியை முளைக்கக் கட்டளையிட்டு, அதை அவன்மேல் ஓங்கி வளரப்பண்ணினார்; அந்த ஆமணக்கின்மேல் யோனா மிகவும் சந்தோஷப்பட்டான்.

5. தேவனுடைய பூச்சி - யோனாவின் வருத்தம்

யோனா 4:7 மறுநாளிலோ கிழக்கு வெளுக்கும் நேரத்தில் தேவன் ஒரு பூச்சியைக் கட்டளையிட்டார்; அது ஆமணக்குச்செடியை அரித்துப்போட்டது; அதினால் அது காய்ந்துபோயிற்று.

யோனா 4:8 சூரியன் உதித்தபோது தேவன் உஷ்ணமான கீழ்க்காற்றைக் கட்டளையிட்டார்; அப்பொழுது வெயில் யோனாவுடைய தலையில் படுகிறதினால் அவன் சோர்ந்துபோய், தனக்குள்ளே சாவைவிரும்பி: நான் உயிரோடிக்கிறதைப் பார்க்கிலும் சாகிறது நலமாயிருக்கும் என்றான்.

6. யோனா கற்றுக்கொண்ட பாடம்

யோனா 4:9 அப்பொழுது தேவன் யோனாவை நோக்கி: நீ ஆமணக்கினிமித்தம் எரிச்சலாயிருக்கிறது நல்லதோ என்றார்; அதற்கு அவன்: நான் மரணபரியந்தமும் எரிச்சலாயிருக்கிறது நல்லதுதான் என்றான்.

யோனா 4:10 அதற்குக் கர்த்தர்: நீ பிரயாசப்படாததும், நீ வளர்க்காததும், ஒரு இராத்திரியிலே முளைத்ததும், ஒரு இராத்திரியிலே அழிந்து போனதுமான ஆமணக்குக்காகப் பரிதபிக்கிறாயே.

யோனா - தொகுப்புரை

4 அதிகாரம்

யோனா 4:11 வலதுகைக்கும் இடதுகைக்கும் வித்தியாசம் அறியாத இலட்சத்து இருபதினாயிரபேருக்கு அதிகமான மனுஷரும் அநேக மிருகஜீவன்களும் இருக்கிற மகா நகரமாகிய நினிவேக்காக நான் பரிதபியாமலிருப்பேனோ என்றார்.

"ஆமணக்குக்காகப் பரிதபிக்கிறாயே" - இந்த வரலாற்றின் முடிவு இந்தப் புஸ்தகத்தில் கூறப்படவில்லை. யோனா எதுவரையிலும் கோபமாக இருந்தான் என்பதும் தெரியவில்லை. நினிவே பட்டணத்தாரும் எவ்வளவு காலத்திற்குக் கர்த்தரையே நம்பியிருந்தார்கள் என்பதும் தெரியவில்லை.

புத்தகத்தலைப்பின் முக்கியத்துவம்

ஆசிரியரின் பெயராகிய யோனா என்னும் பெயரே இந்நூலுக்கும் கொடுக்கப்பட்டுள்ளது.

மிகச் சிறிய அதிகாரம்

- 2,3 (10 வசனங்கள்)

மிக நீண்ட அதிகாரம்

1 (17 வசனங்கள்)

யோனா - தொகுப்புரை

4 அதிகாரம்

மொத்த அதிகாரங்கள்: 4

முக்கிய வேதவசனம்

"யோனாவுக்கு இது மிகவும் விசனமாயிருந்தது; கடுங்கோபங் கொண்டு," (யோனா 4:1)

முன்னுரை

நினிவே அசீரிய சாம்ராஜ்ஜியத்தின் தலைநகரமாகும். சுமார் 300 ஆண்டுகள் உலக வல்லரசுகளில் ஒன்றாகச் சிறந்து விளங்கியது (சுமார் கி.மு. 900-600).

இவர்கள் இஸ்ரவேலர்களின் எதிரிகளாக இருந்தனர். ஆகையினால் தங்கள் எதிரிகளுக்கு எதிராகத் தீர்க்கதரிசனம் உரைக்குமாறு தேவன் யோனாவை அழைத்தார். இறுதியில் அவர்கள் வடக்கு ராஜ்ஜியமான இஸ்ரவேலைக் கைப்பற்றினார்கள்.

அவர்கள் மனந்திரும்புவார்கள் என்றும், தேவன் அவர்களை அழிக்கமாட்டார் என்றும் யோனா பயந்து, தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் தர்ஷீசுக்குச் செல்லும் கப்பல் ஏறி, பயணம் செய்தான்.

யோனா இஸ்ரவேலில் காத்தேப்பார் என்னும் ஊரில் வசித்து வந்தார். யெரொபெயாமின் ஆட்சிக் காலத்தில் அவன் ஆமாத்தின் எல்லை முதற்கொண்டு சமபூமியின் கடல்மட்டுமுள்ள இஸ்ரவேலின் எல்லைகளைத் திரும்பச்சேர்த்துக் கொண்டான் (2 இராஜாக்கள் 14:25). ஆகையினால், தேவன் தம்முடைய விரோதிகள் மீது மனதுருக்கமாய் இருப்பதை யோனா விரும்பவில்லை. தேவன் யோனாவின் மீதும் நினிவே பட்டணத்தார் மீதும் இரக்கம் காண்பித்த நிகழ்ச்சிகள் இந்தப் புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளன.

புத்தகத்தின் பொதுவான சுருக்க வருணனை

1. யோனாவின் கீழ்ப்படியாமை காற்று, பெரிய மீன் (அதிகாரம் 1)
2. யோனாவின் ஜெபமும், மீனின் வயிற்றிலிருந்து யோனா விடுவிக்கப் படுதலும் (அதிகாரம் 2)
3. நினிவேயின் ஜனங்களுக்கு யோனா பிரசங்கம் பண்ணுவதும் அவர்கள் மனந்திரும்புவதும் (அதிகாரம் 3)
4. நினிவே பட்டணத்தார் மனந் திரும்பியதற்காக யோனாவின் கோபம் (அதிகாரம் 4)